**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண்.51/2018</u>**

PW3 – திரு. ஆரோக்கிய சாமி நாள். 26.06.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B,ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். என்னவென்றால் 162/27. தாவா சொத்தின் அருகில் உள்ள எனது சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 162/8. சர்வே எண் 162/8 சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பட்டா இல்லை நத்தம் புறம்போக்கு ஆகும். தாவா சொத்து நத்தம் புறம்போக்காக இருந்தது என்றால் சரிதான் அதை தான் வாதி வாங்கியுள்ளார். தாவா சொத்திற்கு யூடிஆர் காலத்தில் பட்டா கேட்டு மனு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

2. தாவா சொத்து யாருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் ஜோசப் என்பவருக்கு எனது தந்தை கிரையம் கொடுத்தார் எப்பொழுது கிரையம் கொடுக்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. வாதியின் தந்தை ஜோசப் எவ்வளவு நாட்களுக்கு முன்னர் இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. யூடிஆர் காலத்தில் நத்தம் மனைகளை அளந்து அனுபவத்தில் உள்ளவர்களுக்கு பட்டா

வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி தெரியாது. யூடிஆர் காலத்தில் நான் ஆசிரியராக பணியாற்றி வந்தேன் என்றால் அத்தானூர், செட்டிகோட்டை கிராமங்களில் ஆசிரியராக பணியாற்றினேன். அத்தானூர், செட்டிகோட்டை கிராமங்கள் அப்போதைய திருவாடானை வட்டத்திலும் தற்போது ஆர்.எஸ்.மங்கலம் வட்டத்தில் உள்ளது என்றால் சரிதான்.

3. நான் ஆசிரியர் பணியாற்றிபோது எனது கிராமம் ஆன செங்குடி கிராமத்தில் இருந்து பணிக்கு சென்று வருவேன் என்றால் சரிதான் சில நேரங்களில் வேலை பார்க்கும் இடங்களில் தங்கிவிடுவேன். நான் ஆசிரியர் என்பதால் எனது கிராமத்தில் நல்லது கெட்டது முடிவுகளை என்னை வைத்து எடுப்பார் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பக்கத்திலிருக்கும் இடத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொல்வது பொய் என்றும் வழக்கிற்காக நான் அனுபவம் செய்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுபவம் செய்து வருவதாக சொல்லும் இடத்திற்கு இந்நாள் வரை பட்டா கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் மனு கொடுக்கவில்லை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். எனது கிராமத்தில் நத்தம் இடத்தில் அனுபவம் செய்து வருபவர்களுக்கு வருவாய்துறை ஆய்வு செய்து பட்டா வழங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. நான் என்னுடைய இடத்தை உண்மையில் அனுபவம் செய்திருந்தால் வருவாய்துறையில் மனு கொடுத்திருப்பேன் என்றும் நான் அனுபவத்தில் இல்லாததால் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி ஜாண் எனக்கு என்ன உறவு முறை என்றால் தெரிந்த நபர். 1ம் பிரதிவாதி சரண்யா எனது ஊரை சார்ந்தவரா என்றால் சார்ந்தவர். தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. மேற்படி பட்டா எப்பொழுது வழங்கப்பட்டது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி தான் தாவா ே◌சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றும் அவரின் அனுபவத்தின் பெயரில் பட்டா வழங்க மனு கோரி 2, 3 பிரதிவாதிகள் அவருக்கு பட்டா வழங்கினார்கள் என்றும்

மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றும் நான் வாதிக்கு அதரவாக தாவா சொத்து குறித்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை